Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

ஸ்தாபிதம் (1889) ஆவணி மீ 28௳ ஆரம்பமானது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10

[புத்-சூ-அ] துன்முகி வருஷம் பங்குனி மீ உ வெள்ளிக்கிழமை (15 MAR 1957) [இல-ச அ]

## தெய்வீக வாழ்க்கைச் சாதனை

---:o:---

## பலதுறை விளக்கும் அறிவுரைகள்

இமயமலைச்சாரலில் இருஷிகேசத்தில், சிவானந்த நகரிலிருந்து அருள் நெறியை உலகெங்கும் பரப்பும் ஸ்ரீமத் சுவாமி சிவானந்த அவர்கள், தெய்வீக வாழ்க்கைச் சாதனையின் பல்வேறு துறைகளை விளக்கிக் கருணைகூர்ந்து தந்துதவிய ஆங்கிலக் கட்டுரை யொன்றின் மொழி பெயர்ப்பு இங்கே தரப்படுகின்றது. பல துறைகள் விளக்கப் பெற்றிருப்பதால் ஒவ்வொருவரும் தத்தமக் கேற்றதை எடுத்துச் சாதனை செய்யலாம். எவ்வளவுக் கெவ்வளவு கூடுதலாகச் சாதனைகள் மேற்கொள்ளப் படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாம் இன்புற்று வாழலாம் என்பது சொல்லாமலே அமையும்.

### ஒழுக்க உறுதி

வாழ்க்கையின் எத்துறையிலும் சீரும் சிறப்பும் அமையவேண்டுமானல், ஒழுக்க உறுதி ஒருவருக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. ஒழுக்க உறுதியாவது சாதனையேயாகும். நியதி தவறுமை, அடக்கம், சுத்தம், கீழ்ப்படிதல் ஆகியவை ஒழுக்க உறுதிக்கு உறுதுணையாயமைகின்றன. பய பக்தியிலும் மேலானதாகின்றது கீழ்ப்படியும் பண்பு. கீழ்ப்படியும் பண்பு தியாகத்திலும் மேலானதாகின்றது. தெய்விக வாழ்க்கை சிறப்புறுதற்கு உறுதியான ஒழுக்கமுறை இன்றியமையாததாகின்றது. ஒழுக்க முறை உறுதியாயிருந்தாலே, இந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன் என்பன ஒழுங்கான முறையில் இயங்கும். இவை ஒழுங்கான முறையில் இயங்குதல் கடவுளையடைந்தின்புறுதற்கு மக்களுக்குதவுகின்றது.

### ஆசனங்கள்

தேகமானது சாதனைக்குச் சாதகமாயிருக்கத்தக்கதாகச் செய்யப்பெற்று ஒருவர் விரும்பியவாறியக்கக் கூடிய நிலைமையில் வைத்திருக்கப் பெறுதல் வேண்டும். அது தாமச குணம் நிறைந்ததாய் அல்லது இயங்குந் தன்மை யில்லாததாயிருக்குமானல் அது பெரும் பாரமானதாய்விடும். தியானம் சித்திதற்கு ஓர் ஆசனத்தில் இரண்டு மூன்று மணி நேரத்துக்குச் சாதகனிருக்கவேண்டுமாகையால் பாரமான தேகத்தையுடைய சாதகன் தாம் விரும்புகின்றபடி யிருக்க முடியாது. பதுமாசனம், சுகாசனம், சித்தாசனம் ஆகிய எது ஒன்றையோ மனத்தை ஒரு முகப்படுத்தித் தியானஞ் செய்தற்கு ஒருவர் கையாளலாம். ஒருவர் மூன்று மணி நேரத்திற்கு அசைவின்றியிருக்கக் கூடியவராதல் வேண்டும் அவ்வாறிருத்தல் ஆசன வெற்றியை அல்லது ஆசனத்தைச் சிறந்த முறையிற் கையாளும் சக்தியைத் தரும். ஓர் ஆசனத்தில் மேலே குறிப்பிட்டவாறு உறுதியாக ஒருவர் இருக்க முடியுமானல் பிராணன் பொருத்தமான முறையில் அசையத்தொடங்கும். மனமும் அசைவொழிந்து நிலைநிற்கும். மனம் அசைவின்றி நிற்கும் நிலைமையைப் பதுமாசனம் தருகின்றது. ஆகையினலே ஒவ்வொரு சாதகனும் பத்து நிமிட நேரத்துக்கு ஓர் ஆசனத்தி லிருக்கத் தொடங்கி இருக்கும் நேரத்தைப் படிப்படியாகக் கூட்டிக்கொள்ளுதல் வேண்டும். இருக்கும் பொழுது ஓவியம் போன்று அசையா திருத்தல் வேண்டும். அப்படி இருத்தல் இந்திரியங்களை அடக்குதற்குப் பேருதவியா யிருக்கும்

பிற ஆசனங்களையும் பழகுதல் வேண்டும். பூஜாங்காசனம், ஹலாசனம், அர்த்தமற்சியேந்திராசனம் என்பவை முதுகெலும்பை வசையும் தன்மையதாக்கும். எலும்புகள் விரைவில் இறுகமாட்டா. பிரமச்சரியம் அனுட்டித்தற்குப் பேருதவியாயிருக்கும்.

பிற ஆசனங்களையும் பழகுதல் வேண்டும். பூஜாங்காசனம், ஹலாசனம், அர்த்தமற்சியேந்திராசனம் என்பவை முதுகெலும்பை வசையுந்தன்மையதாக்கும். எலும்புகள் விரைவில் இறுகமாட்டா. பிரமச்சரியம் அனுட்டித்தற்கும், விவாகஞ்செய்யாது வாழ்தற்கும், உணவு சீரணித்தற்கும் சிரசாசனம் உதவும். தேவையான இரத்தத்தை அது மூளைக்கு உதவுகின்றது; ஏகாக்கிர சித்தத்தை உண்டாக்குகின்றது; விவேகத்தை வளர்க்கின்றது.

### அறநெறி ஒழுக்கம்

அறநெறியில் ஒழுகுதல் ஒவ்வொருவருக்கும் வேண்டப்படுவதொன்றாகும். அஹிம்சை, சத்தியம், பிரமச்சரியம், வெஃகாமை, வெளவாமை என்பன அறநெறி ஒழுங்கத்துக்கு வேண்டப்படும சாதாரண வாழ்க்கை முறையைச் சாதகன் கைக்கொள்ளுதல் வேண்டும். அறநெறியில் ஒழுக்கத் தூய்மையடைந்தாலே ஒருவர் நிர்விகற்பசமாதியையடைதலாகும். அறநெறி ஒழுககம் மிக முக்கியமானது. அஃதே எல்லாமாகும். அறிநெறி ஒழுக்கத்தில் உறுதிபெற்றவர் இலகுவாகவும் விரைவாகவும் இறைவன் திருவடிகளையடைவர். இருதயம் தூய்மையடைதல் வேண்டும். தூய்மையடைந்த இருதயத்தை அசைவின்மை, சாந்தம், சகிப்பு, தாழ்மை, அருளொளிக்காட்சி ஆதியாம் சிறந்த பண்புகள் உறைவிடமாகக் கொள்ளும். அறநெறி ஒழுக்கம், புலனடக்கம், உணவுக் கட்டுப்பாடு, தேகக்கட்டுப்பாடு ஆகிய எல்லாம் சாதனை செய்யப் படுதல் வேண்டும்.

### உணவுக் கட்டுப்பாடு

சாத்துவிக குணத்தை வளர்க்கும் உணவைச் சாதகன் உண்டல் வேண்டும் பசியுண்டாக்குந் தன்மையதாய், உறைப்பில்லாததாய், சுவையுள்ளதாய், சத்துள்ளதாய், சுத்தமானதாய் உணவிருத்தல் வேண்டும். தேகசுகத்தையும், திடத்தையும், நீண்ட ஆயுளையும், மகிழ்வுறும் மன நிலைமையையும் அது தருதல் வேண்டும். மிளகாய், சரக்கு, கடுகடுக்கும் பிற பொருள்கள் உப்பு புளி மிகுதல் கூடாது. இவற்றுடன் முறுகப் பொரித்த பொரியல் ஆகியவை தவிர்க்கப்படுதல் வேண்டும். எப்பொழுதும் புது உணவு உட்கொள்ளுதல் வேண்டும். பாரமில்லாத உணவாதலும் வேண்டும். பெரும்பாலும் இராக் காலத்தில் மக்கள் வயிறுநிறைய உண்பது வழக்கம். அப்படி உண்பதால் நித்திரை பங்கப்படும் அதிகாலையில் எழும்ப முடியாமலிருக்கும்.

### காலை வழிபாடு

சாதகர்கள் இரவு ஒன்பது பத்து மணியளவில் நித்திரைக்குச் சென்று அதிகாலையில் பிராமி முகூ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

அரசியல் அலை

## வாள் வீச்சுக்கு அழைக்கின்றார் மந்திரியார்!

---o---

### வாய்ப் பாச்சலுக்கும் பின் வாங்கமாட்டாராம்

---:0:---

### வெப்பத்தின்வேகம் மிகுந்து விட்டது

---0-0---

**வாள்** (எடுப்பேன்) **வாள்** (எடுப்பேன்) என்று பகிரங்கமாகச் சத்தம் போடுகின்றார் வாழ்நாள் முழுதும் ஓயாமல் வாயாற் சண்டைபோடப் பயின்றிருக்கும் காலி அங்கத்தவர் திரு. தகநாயக. காலியிற் கட்சிக் கூட்டத்தில் ம. ஐ. முன்னணி முழக்கம். அதற்குப் பின் ஐ. தே. கட்சி கொழும்பிலே முழக்கம். இந்த நிகழ்ச்சிகளைவிட இப்பொழுது மந்திரியார் தகநாயகவின் **வாள்** முழக்கம்.

ம. ஐ. மு. — ஐ. தே. க. பேச்சுப் போட்டியின் தகையை தரம் நயம் அபிநயம்முதலியவற்றைப்பற்றி யாரும் அதிசயப்படமாட்டார்கள். தமிழ்பேசும் மக்களை வாய்ப் பேச்சுக்கும் வாள்விளையாட்டுக்கும் ஒரு மந்திரியார் அறைகூவியழைக்கின்றார் என்பது தான் ஆச்சரியமாகின்றது

ஆங்கிலப் பத்திரிகையாளர்மீதும் கைஓங்குகின்றார் இந்த அமைச்சர். இந்தச் செய்தித் தாள்கள் இவருக்கு அத்தாள்களிலேகொடுத்த இடத்தாலல்லவோ இப்பொழுது இவர் ஒரு மந்திரியாய் இருக்கின்றார்? ஆனல் செய்தித் தாள்களுடன் வாயால், வாளால் எவ்வாறு போர்புரிய முடியும். கை அல்லவோ ஆயுதமாக வேண்டும். எழுதுகோல் கொண்டு ஒருசாரார் தாக்கக் கதாயுதம் கையிற் காலி அங்கத்தவர் தூக்க நிகழும் மோதுதலன்றோ சாதனைக்குகந்ததாயிருக்கும்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## கட்டைவலி ஞானசாரிய கல்லூரி

### அறிக்கையின் சில பகுதிகள்

ஆரம்பம்:

1935-ம் ஆ௵ பங்குனி மீ 7௳ திங்கட்கிழமை காலையில் திருநெல்வேலி வேதாந்த மடத் தாபகர் திரு. சுவாமி மகாதேவா அவர்களும், திரு. சு சிவபாதசுந்தரம் B.A. அவர்களும், திக்கம் திரு. செல்லையாபிள்ளையவர்களும் மயிலிட்டி திரு. சி. சுவாமிநாதன் B. A. அவர்களும் இன்னும் பல சைவப் பெரியார்களும் கூடி சங்குஸ்தாபன முறைப்படி அத்திபாரம் இட்டனர். தற்போதுள்ள தலகாரியஸ்தர் திரு. க. பொன்னுத்துரை அவர்கள் கல்லூரி ஆரம்பமானபோது தலைவராகவும் அதிபராகவும் திரு. வே. ஆள்வார்ப்பிள்ளை அவர்கள் காரியதரிசியாகவும், திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் தனதிகாரியாகவும் கடமையாற்றினர். கல்லூரி நன்கொடை பெறும்வரை இம் மூவரும் அதிக பணம் செலவிட்டு, யுடன் 22 வருடங்களாகக் கல்லூரியை வளர்த்து தற்போது அது 550 பிள்ளைகளுக்கு மேற்பட்டதாயும், 26 ஆசிரியர்களையுடைய சிரேஷ்ட கல்லூரியாகவும் விளங்குகின்றது.

ஞானசாரிய கலாவிருத்திச் சங்கம்:

இச்சங்கம் பாடசாலைக்கு வேண்டிய ஆசிரியர்களைச் சைவ வித்தியாவிருத்திச் சங்க உதவியுடன் நியமிக்கின்றது.

சமய வளர்ச்சி:

கல்லூரியில் சைவ மாணவர் கழகம் சைவமாணவிகள் கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குருபூசைகள் வெள்ளிக்கிழமைச் சமயப் பிரசங்கங்கள் விஜய தசமித் தேவாரப்போட்டி மகாத்மாகாந்தி தினம் விவேகானந்த சுவாமிகள் திருநாள் சமயதீட்சை

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்க [குக
ஆழ்க தீயதெல்லாம்அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி௵ பங்குனி௴ ௨ ௳ வெள்ளிக்கிழமை

## நல்வரவு !

'ஞாலம் நின்புகழே ஆக வேண்டும்' என்று அடியார்கள் அன்பின் பெருக்கினால் எண்ணினர்கள். பூவுலகெங்கணும் பொலிந்தது சைவம். ஆசியாக் கண்டத்து மட்டுமன்று ஏனைய இடங்களிலும் மேன்மைகொள் சைவம் அக்காலத்தில் ஆங்காங்கு விளங்கி வந்தது. பரத கண்டத்து வடபால் நேபாள தேசத்தில் விளங்கிய இந்துமதம் அந்நாட்டைக் குன்றின் மேலிட்ட தீபம்போலக் குவலயத்தில் திகழ வைத்தது. மதச்சால்பின் மாண்பினால் ஆங்கு மன்னர் பரம்பரை, வாழையடி வாழையாகச், செங்கோல் செலுத்தி மக்களின் செம்மைக்கு வழிகாட்டியாக விருந்ததன் காரணமாகச் சனநாயக மாற்றம் நேபாளத்திற் புகமுடியாது போனது. இத்தகைய ஆட்சிச்சீர் பொலிந்த நேபாள மன்னனும் இராணியும் இந்துமதச் சால்புக் கிருப்பிடமாகிய இலங்கையைத் தரிசிப்பது பொருத்தமாகின்றது. நேபாள மன்னனின் வருகை இந்நாட்டு அரசியற்றலைவர்களுக்கு முடியாட்சியும் குடியாட்சியும் சொல்லளவிலேயன்றி நடைமுறையிற் செம்மையாயிருந்தாற்றான் மக்களால் வரவேற்கப்படு மென்றும அவ்வாறமையாதவழிமறுக்கப்படுமென்றும் அறிவுறுத்துகின்றது. குடியாட்சி என்ற பெயருடன் மக்களுக்கு வெறுப்பையும் அமைதியின்மையும் அதிருப்தியையும் உண்டுபண்ணும் அரசாங்கம் சனநாயக முறைக்கு அவமானத்தை வருவிக்கின்றதென்பதைத் தலைவர்கள் உணருதல் வேண்டும்.

சமய நெறியே உலகத்தில் அமைதயை உண்டாக்குவதற்கு உறுதுணையாயுள்ளதென்று அறிஞர்கள் எடுத்துக்காட்டிய வண்ணம் இருக்கும் இவ் வேளையில் இந்துமதப் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் ,நேபாள மன்னரின் வருகை இந்நாட்டு மக்களிடத்தும் தலைவர்களிடத்தும் நற்பயன் விளைவிக்கும் நல் லெண்ணத்தை உண்டு பண்ணும் என்று எண்ணுகின்றேம். நேபாள மன்னன் — இராணி வருகை நல்வரவாகும்.

---

### இலட்சக்கணக்கால்!

பிரதமர் நேருவுடன் போட்டியிடும் சன சங்க அபேட்சகர் இதுவரையில் (இன்னும் வாக்குச்சீட்டுகள் எண்ணி முடிவு காணப்படவில்லை) ஒன்றரை இலட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்றிருந்கின்றாராம். போட்டிக்காகப் போட்டியிட்டவர் பெருமை இவ்வளவுதான்!

### அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

**வேலை நிறுத்தம்**

ம. ஐ. முன்னணி ஆட்சியில் கொழும்பிலே காட்சியளிக்கும் வேலை நிறுத்தம் நாட்டை எவ்வளவு பாதிக்கின்றதென்று எண்ணுவோயானாற் பிரதமர் வெச்சுப் பேச்சு ஏளனத்தை விட்டு ஆக்க வேலையிற் கவனத்தைச் செலுத்துவார். அப்படி உணர்ச்சி தோன்றாதிருப்பதற்குக் காரணமென்ன?

### சிங்களம் படிப்பதற்கு உபகாரம்

தனிச் சிங்களச் சட்டத்தைக் கையாளுவதில் அரசாங்கப் பகுதிகளில் உண்டாகும் இடைஞ்சல்களை நீக்குதற்கு அரசாங்கம் உபகாரச் சம்பளத் திட்டமொன்றை உண்டாக்கியிருக்கின்றதாம். சிங்கள மொழி அறிவுத்தகுதிபெறுவோர் ஒவ்வொருவருக்கும் 500 ரூபாவுக்குக் குறையாத உபகாரம் அத்திட்டத்தின் படி கொடுக்கப்படும். இதனல் சிங்களமொழி அறிவுடையோர் தொகை பெருகித் தனிச் சிங்கள ஆட்சி இலகுவாகுமென்பது கருத்தாகும்.

## பிரிவுபசார விழா

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் ஆறுவருடங்களாக உதவியாசிரியராகவும் மேற்படி பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கத்தில் தனாதிகாரியாகவும் சேவை புரிந்த திரு. க சோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலைக்கு மாறிச் சென்றதை முன்னிட்டு பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கம பிரிவுபசாரம் ஒன்றைச் சிறப்பாக நடாத்தியது பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. அ. இளையதம்பி அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு க. சோதிலிங்கமவர்கள் இப்பாடசாலைக்கு அல்லும் பகலும் செய்த சேவையை நாம் உள்ளவரை மறக்கவோ, மறுக்கவோ முடியாது என்றும் பிரிந்து செல்லும ஆசிரியர் எல்லா வகையான நற்குணமும் வாய்ந்தவர். எங்கள் சிறுவர்களுக்கும் பாடசாலைக்கும் அவர் செய்த தொண்டு கொஞ்சமல்ல வென்றும் பிரிந்து செல்லும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டித் தலைவரும் திரு. அ. சேனாதிராசாவும் வேறு பலரும் பேசினர்கள். திரு க. சோதிலிங்கம் அவர்களின் பதிலுடன் விழா இனிது முற்றுப்பெற்றது.

கடித.

---

# குன்றக்குடி அடிகள் வரும் நாள் (15-3-57)

குன்றக்குடி அடிகளார் 14-3-57 ல் இங்கே வந்து 15-ம் 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடக்கும் அருள் நெறி விழாவிற் பங்குபற்றுவாரென்று முன்பு அறியத் தந்தனர். தவிர்க்க முடியாத நிலைமையில் குறித்த திகதிகள் மாற்றப் பட்டுள்ளன.

அடிகளார் 15-3-57 வெள்ளிக்கிழமை வருவாரென்றும் அடுத்தநாள் அருள் நெறி விழாவிற் பங்குபற்றுவாரென்றும் இப்பொழுது காந்திய சேவா சங்கக் காரியதரிசி அறியத் தருகின்றார்.

# இந்தியத்தேர்தல் வெற்றி விபரங்கள்

### சட்ட சபைகள்

| மாகாணங்கள் | மொத்த இடங்கள் | ஒரு கட்சி ஆட்சிக்குத் தேவையான இடம் | முடிவு தெரிந்த தொகை | இந்திய தேசிய (காங்கிரசு) மகாநாடு | பொதுவுடமை | மக்கள் சமூகம் | சன சங்கம் | பிற கட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| * தமிழ்நாடு | 205 | 103 | 159 | 116 | 2 | 2 | | 35 |
| கேரளம | 126 | 64 | 97 | 35 | 45 | 8 | | 9 |
| * மைசூர் | 208 | 105 | 151 | 109 | | 13 | | 38 |
| * அசாம் | 108 | 55 | 66 | 45 | | 10 | | 10 |
| ஒரிசா | 140 | 71 | 89 | 36 | 3 | 5 | | 12 |
| பம்பாய் | 396 | 199 | 287 | 152 | 6 | 9 | 22 | 48 |
| * ம.பிரதேசம் | 288 | 145 | 258 | 206 | 2 | 12 | 9 | 29 |
| பீகார் | 318 | 160 | 69 | 43 | 6 | 11 | 6 | 5 |
| * உ.பிரதேசம் | 430 | 216 | 321 | 219 | 6 | 35 | 9 | 52 |
| * பாஞ்சாலம் | 154 | 78 | 120 | 97 | 6 | 1 | 6 | 10 |
| இராசஸ்தானம் | 176 | 89 | 112 | 75 | 1 | 1 | 5 | 30 |
| மே. வங்கம் | 252 | 127 | 40 | 28 | 4 | 4 | | 4 |

தி. மு. க. வெற்றி 7 இதில் அடங்கியுள்ளது.

### மக்கள் சபை

தெரிவு செய்யப்பட்ட தொகை 133. இந்திய தேசிய மகாநாடு 100. பிற 33.

* ஆந்திரா (ஏழு இராச்சியங்களில் தேசிய மாநாட்டுக்குப் பூரண வெற்றி.)

---

# உங்கள் நக்ஷத்திரம் ?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராகாச்சாரி ...

### [ இவ்வாரப் பலன்கள் 17—3—57 —— 23—3—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

ஒரு தளப்பமான வாரம், வரவு செலவுகளைச் சமாளிப்பதில் வருத்தப்படுவீர். இனத்தவர்கள் உமக்குச் சிறிது தொந்தரவு தரக்கூடும். சுகவீனங்களுக்கு இடமுண்டு புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி எல்லாவற்றிலும பழுதானவை.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது, மனம் சலனமின்றியிருக்கமாட்டாது. வேலை கூடுதலாயிருக்கும். கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்.**

பணத்துறையில் ஓர் நல்ல வாரம். உமமுடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர். புகழும் சமூக சித்தியும் நிச்சயம். ஆனல் அளவுகடந்த வேலை செய்யவேண்டியவராவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்**

மனத்துன்பங்களுக்கும் குடும்பக்குழப்பங்களுக்கும் இந்த வாரம் இடமுண்டு. நீர் சண்டை தொடுக்க முந்துவீர் நண்பர்களுக்கிடையிற் பிழை எண்ணங்களுக்கு இடமுண்டு. வார இறுதியிற் பண நிலைமை திருந்துதல் நிச்சயம்,

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். ஆனற் குடும்பக கருமங்கள் தொடர்ந்து குழப்பமாயேயிருக்கும் நிமை இழைப்போரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வார இறுதியிற் சுகவீனத்துக்கும் இனத்தவர்களுடன் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

குடும்பக் கருமங்கள் தளப்பமாகவே யிருக்கும். வழக்கத்திலும் வேலை கூடுதலாகவே யிருக்கும். தனலாபங்கள் நிச்சயம் ஆனல் நீர் சிறிதும் மிச்சம்பண்ண முடியாமலிருக்கும் வார இறுதியில் நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**துலாம் சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

மிகுந்த எதிர்ப்புகளுக்கூடாக இந்தவாரம் முன்னேற வேண்டிவரும். நீர் பிழையாக விரைவிற் கருதப்படுவீர், இரகசியப் பகைவர்மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை**

சிறு சுகவீனங்களைவிட இந்த வாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும், புகழும் சமூக சித்தியும் நிச்சயம்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.**

சகோதர சகோதரிகள் இந்த வாரம் அதிக உதவியாயிருப்பர், எதிரிகளுக்கு அழிவுக்கிடமுண்டு. ஆனல் தேகசுகம் தொடர்ந்து நல்லாயில்லாமலிருக்கும்.

**மகரராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம், ஆனல் நீர் அளவுக்குக்கூடிய வேலை சுமத்தப்படுவீர். தனலாபமும் புகழும் நிச்சயம். தேகசுகம் சிறிதுகாலத்துக்கு விசேட கவனம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.**

ஞாயிறும் திங்கள் காலையும் உம்மைச் சிறிது குழப்பக்கூடும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். உத்தியோக சித்திக்கும் புகழுக்கும் இடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

முன் அரைவாரம் தளப்பமாயிருக்கும. திங்கள் செவ்வாயும் புதன் காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும் வாரமிகுதி புதுக் கருமங்களுக்கு நல்லதாகும். தனலாபங்கள நிச்சயம்.

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

(முற்றொடர்)

**சுந்தரா! வந்தாயோ?** சேரமான் திருவணுக்கன் திருவாயிலில் நிற்கச் சுந்தரர் உள்ளே புகுந்தார். சந்நிதானத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்றார். "சுந்தரா! வந்தாயோ?" என்றனர் பிரானார். சுந்தரர் "சுவாமி, அடியேன் பிழையைப் பொறுத்து அருள் புரிந்த தன்மையை என்னென்பேன்" என்று சொல்லிச் சிவானந்த வெள்ளத்தில் திளைத்து நின்றார். சிவானந்த வெள்ளம் - சிவனது கருணைக் கடல். திளைத்தல்-மூழ்குதல் அமிழ்ந்து போய் நிற்றல்.

பின்னர், சுந்தரர் பிரானை வணங்கிச் சேரமான் திருவணுக்கன் திருவாயிற் கண்ணே நிற்பதை விண்ணப்பஞ் செய்தார். பரமன் சேரமானை அழைப்பித்தார். அவர் வந்து வணங்கி முன்னாலே நின்றார். இறைவன் சேரமானை நோக்கி "நீயும் ஆலால சுந்தரனும் நமது கணங்களுக்குத் தலைவராயிருங்கள்" என அருள் செய்தார். சுந்தரர் ஆலால சுந்தரர் ஆனார். ஆலால சுந்தரர்:- தேவர்களும அவுணர்களும் திருப்பாற் கடலைக் கடைந்த காலத்து எழுந்த ஆலாலத்தைக் கொணருமாறு (ஆலாலம் - விடம்) தம் பக்கத்தே தொண்டு செய்து கொண்டு நின்ற சுந்தரரை நோக்கி இறைவன் ஆஞ்ஞாபித்தார்: சுந்தரர் அந்த ஆலாலத்தைப் பற்றிக்கொணர்ந்து கொடுத்தாராகலின் அப்பெயர் பெற்றார். சேரமான் கண நாதரானார். பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அனிந்திதையாரும் ஆனார்கள்.

இதுவரை சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத்தைப் பற்றிப் படித்தீர்கள். இச் சரித்திரத்தின் மூலம் நீங்கள் கற்றுக்கொண்டதென்ன?

ஊழ்வினை ஒருவரால் ஒழிகற்பாலதன்று என்பதும அது உருத்து வந்து தம் பலங்களை ஊட்டியே தீரும் என்பதும் இறைவன் தம்மை யுணர்ந்து திருவருள் வழி நிற்கும் மெய்ஞ்ஞானிகளுக்கு - மெய்ஞ்ஞானிகள் செயலைத் தஞ் செயலாகக் கொண்டு அருள் செய்வர் என்பது முதலாகப் பல விஷயங்களை நாம் கற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தெய்வக் காதலின் சிறப்பியல்பு. சத்தியந் தவறுதல் கூடாது இறைவன் காருண்ணிய ஸ்வரூபி. மனிதப் பிறவி மயக்கம் பொருந்தியது. மெய்ஞ் ஞானத்தை யுணர்ந்து இறைவனைச் சாரவிடாது நம்மை (ஆன்மாவைச் செம்பி லிருக்கும் களிம்புபோலப் பற்றிக் கொண்டிருப்பது ஆணவ மலம் என்பதும்; எனினும் பக்குவகாலம் வந்தவிடத்து இறைவன் தாமே வலிய வந்து ஆட்கொண்டு அருள் புரிவான் என்பதும் அங்ஙனமே சுந்தரர்க்கு அருள் புரிந்தார் என்பதும் அறியக்கூடியதாகும். அங்ஙனம் அருள் புரிந்தமை தான் மார்ச்சார சம்பந்தம் எனப்படும். மார்ச்சாரம் என்பது பூனை. பூனை தானே தன் குட்டிகளிருக்குமிடஞ் சென்று வேண்டியன ஊட்டிப் போஷித்துப்பக்குவப் படுத்தும் அதுபோல இறைவனும் தாமே வலிந்து சென்று சுந்தரரையும் ஆட்கொண்டருளினர் என்பதை நாம் அறியலாகும்.

இனி உங்களுக்கு உபயோகமாகும்பொருட்டு இச் சரித்திரத்தில் அடங்கிய பிரதான அம்சங்களைத் தொகுத்துக் கூறுகிறேன். அவதானத்துடன் கவனித்துக்கொள்ளுங்கள்.

திருவெண்ணெய் நல்லூர்ப்பெருமானால் விவாக காலத்திலே தடுத்தாட் கொள்ளப்பட்டார். திருவாரூரிலே பரவையாரைக் கண்டு புனிதக் காதல் கொண்டு இறையருளோடு மணம் புரிந்தார். திருத்தொண்டத்தொகை பாடி அடியார் கூட்டத்தை வணங்கினார். குண்டையூரில் திருவருளான் நெல் பெற்றார். கோட்புலி நாயனாருடைய புத்திரிகளுக்கருள் புரிந்து சிங்கடியப்பன் என்னுந் திருப்பெயர் பெற்றார். செங்கற்கள் பொன் கற்களாகப் பெற்றார். திருமுதுகுன்றிலே - பன்னீராயிரம் பொன் பெற்று - விருத்தாசலத்திலேயுள்ள மணிமுத்த நதியிலே இட்டுத் திருவாரூரிலே யுள்ள திருக்குளத்திலே எடுத்தார். திருவொற்றியூரிலே சங்கிலியாரை மணம் புரிந்தார். சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியைத் தவறினமையால் இரு கண்களும் மறையப் பெற்று மீண்டும் இறையருளாற் பார்வை பெற்றார். பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு இறைவன் சுந்தரருக்காகத் தூது சென்றார்.

கலிக்காம நாயனாருடைய சூலை நோயைத் தீர்த்து வைத்தார். காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தார். சேரமான் அனுப்பிய திரவியங்களைத் திருமுருகன் பூண்டி என்னுந் தலத்தில் வேடுவர் கைப் பற்றிக் கொள்ள ஆங்குச் சென்று "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்" என்று பதிகம் பாடிப் பறிக்கப்பட்ட திரவியங்களை மீண்டும் பெற்றார். முதலை வாய்ப்பட்ட புதல்வனை மீட்டார். வெள்ளை யானையிலேறிக் கொண்டு திருக் கைலாயஞ் சென்றார்.

மீண்டும் ஒருமுறை கூறுகின்றேன். கவனியுங்கள். திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமானால் விவாக காலத்திலே தடுத்தாட் கொள்ளப்பட்டமை. திருவாரூரிலே பரவையாரை மணஞ் செய்தமை.

திருத்தொண்டத்தொகை பாடி அடியார் கூட்டத்தை வணங்கியமை.

குண்டையூரில் நெல்பெற்றமை.

கோட்புலி நாயனாருடைய புத்திரிகளுக்கருள் புரிந்தமை. செங்கற்கள் பொன்னாகப் பெற்றுக் கொண்டமை. திருமுதுகுன்றிலே 12000 பொன் பெற்றுவிருத்தாசலத்திலே யுள்ள மணிமுத்த நதியிலே இட்டுத் திருவாரூர்த் திருக்குளத்திலே எடுத்தமை. சங்கிலியாரை மணந்தமை. இரு கண்களும் மறையப்பெற்று மீண்டும்பார்வைபெற்றமை. பரவை ஊடலைத் தீர்க்க இறைவன் தூது சென்றமை. கலிக்காமருடைய சூலையைத் தீர்த்தமை. காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தமை. வேடுவராற் பறிக்கப்பட்ட திரவியங்களைத் திருமுருகன் பூண்டியில் மீண்டும பெற்றமை. முதலை வாய்ப்பட்ட புதல்வனை மீட்டமை. வெள்ளை யானையிலேறிக் கொண்டு திருக் கைலாயஞ் சென்றமை.

சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தை நன்கு அறிந்துகொண்டீர்கள். இனி, அடுத்த பாடத்தில் ஒப்புயர்வில்லா அப்பர் பெருமானைப் பற்றிய திருநாவுக்கரசு நாயனார் புராணத்தைப் பற்றிப் படிப்போம்.

[வளரும்.]

---

சிவநெறிக் கழக

# அங்குரார்ப்பணம்

மேற்படி சிவநெறிக் கழகம் அளவெட்டி சதானந்த வித்தியாலயத்தில் 22-2-57ல் நிறுவப்பட்டு செயற்குழுவின் தெரிவு நடைபெறும். இவ்வித்தியாலய மாணவரின் சமய வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் பயன் தரக்கூடிய பல திட்டங்கள் வகுத்துச் செயலாற்ற ஷை கழகக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். 26-2-57 செவ்வாய்க்கிழமை பிற்பகல் முதலாவது பொதுக் கூட்டம் நடைபெற்றது. சைவப் புலவர் ச. சச்சிதானந்தம் ஆசிரியர் அவர்கள் "சிவராத்திரி விரதமகிமை" என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றினர். இன்று சைவமக்கள் ஓர் இருள்மயமான சூழ்நிலையில் வாழவேண்டியநிலைமை ஏற்படுகிறதெனவும், இந்நிலையில் நாம்விமோசனமடைய வேண்டுமானால், உடல் வலியும் உயிர்வலியும் எமக்கு அவசியம் தேவையெனவும் குறிப்பிட்டார். உடல் வலியையும் உயிர் வலியையும் பெற்று, இகபர இன்பங்களை நாம் அனுபவிப்பதற்கு விரதம் இன்றியமையாததெனவும், பிரம விஷ்ணுக்களின் ஆணவ இருளையகற்றி அகந்தையைக் கெடுத்து அருள் ஒளியை இறைவன் உலகிற் பரப்பிய சிவராத்திரி தின விரதமே விரதங்களிற் சிறப்புடையது. மாணவர்கள் இவ்விரதங்களைத் திரிகரண சுத்தியுடன் அனுஷ்டித்து உடல், உயிர்வலிமை பெற்றுச் சைவ உலகிற்குத் தொண்டாற்றிச் சைவ சமயத்தை வளர்ப்பதே தலையாய கடனெனவும் மேலும் பேசும்போது எடுத்துரைத்தார்.

---

யாழ்ப்பாணப்பகுதி சனசமூக நிலைய சமாச

# வருடாந்த விழா

"தளர்ந்திருக்கும் வயோதிப நேரத்தில் அனேகரைப்போல வீட்டில் இளைப்பாறியிருந்து சுகமனுபவிக்கும் வசதிகளை மறந்து சனசமூக சேவை சேமிப்பு இயக்கச் சேவை முதலியவைகளில் சலியாது உழைத்து வரும் அரசவாயில் முதலியார் வி. தியாகராசா அவர்களை நீங்கள் இத்தனை பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்து கௌரவித்தமை அவரது ஒப்பற்ற சேவைக்கு உயர்ந்த சாட்சியாகின்றது" என்று உதவித் தலதாபன அதிபர் திரு. ஏ ஏ. யோசேப் அவர்கள் 9-3-57 காலை பாரதிபாஷிய பாடசாலையில்நடந்த சமாச வருடாந்தக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

கூட்ட ஆரம்பத்தில் சமாச உத்தியோகத்தர் தெரிவையும் வருடாந்தக் கூட்ட நிகழ்ச்சியையும் உத்தேசித்து சமாசத்துக்கு எதிரான ஒரு விளம்பரத்தை நடேஸ்வரக்கல்லூரி உப அதிபரும் அங்கத்தவரும்தலைவர்பதவிக்குப் போட்டியிட்டவருமாகிய திரு.A. மார்க்கண்டன் B A. B. Sc. அவர்கள் அங்கத்தவர்களுக்கு விநியோகித்தார். பெரும்பான்மையான வாக்குகளால் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது.

முதலியார் V. மகேசன் J. P. தனாதிகாரியாகவும், முகாந்திரம் E. P. இராசையா காரியதரிசியாகவும் ஸ்ரீ W. N. தேவகடாட்ஷம் உப காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: R. S. கந்தையா (பரித்தித்துறை பட்டினசபையின் உபதலைவர்) A. A. நல்லதம்பி (புங்குடுதீவு கிராமச்சங்கத் தலைவர்) ஆகியோர் உப தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

"சமூகத் தொண்டன்" பத்திராதிபராக திரு. K. P. முத்தையாவும் கணக்குப் பரிசோதகராக திரு. V. சுந்தரம்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

காரியதரிசியின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

கமத் தொழில் கைத் தொழிற் பயிற்சி பெற

# இளைஞர்கள் தேவை

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத்தின் ஆதரவில் சர்வோதய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கிளிநொச்சியில் கமத்தொழில் கைத்தொழிற் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் 14, 15 வயதுள்ள இளைஞர்கள் இலங்கையின் எப்பகுதியிலிருந்தும் சாதி சமய இன பேதமின்றிச் சேர்த்துக் கொள்ளப்படுவர். அநாத மாணவர்களுக்கு விசேட சலுகைகளுண்டு.

கமத்தொழில், கைத்தொழில் மேற்படிப்பு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பயிற்சியளிக்கப்படும். மூன்று நான்கு வருடப் பயிற்சியின் பின் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் வழி காட்டப்படும். ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட தொகையான மாணவர்களுக்கு இடமுண்டு. ஆகையால் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள அநாத மாணவர்களை இப் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம். என்று மேற்படி பயிற்சி நிலையக் காரியதரிசி திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அறிவிக்கின்றார்.

விலாசம் :

கிளிநொச்சி கமத்தொழில்
கைத்தொழிற் பயிற்சிநிலையம்
43/2 றஜமாவத்த றோட்,
இரத்மலானை.

43/2 Rajamawata Road
Ratmalana
Mount Lavinia




# தமிழ்மொழித்தொண்டு

## பண்டிதர் இரத்தினத்தின் வேண்டுகோள்

ஆசிய எழுத்தாளர் மாநாட்டிலே பங்குபற்றி இலங்கைத் தமிழ் மக்களுக்குச் செய்த தொண்டைப் பாராட்டுதற்கு அளித்த வரவேற்பில் பண்டிதர் இரத்தினம் அவர்கள் பேசும்போது "யான் ஒரு தமிழாசிரியனுய் இருந்தமையினுற்றன் என்னிடம தமிழ்ப் பற்று நிலைத்து விளங்குகிறது. தமிழுக்கும் தமிழாசிரியர்களுக்கும நமது சமுதாயம் முற்காலத்திற போல் முதலிடம் அளிக்காததாலேயே இன்று இந்த இழிநிலையை அடைந்துளோம். தமிழை வளர்க்க வளம் படுத்த, வாழச்செய்யத் தமிழாசிரியர்கள் முயலுதல் வேண்டும்." மாணவர்களுக்கும் பெற்றருக்கும் நல்ல தமிழ்ப்பற்றையூட்டத் தக்கவர்கள் ஆசிரியர்களன்றி வேறு யார்? 'அவர் செய்வார் இவர் செய்வார்' என்று சோம்பித் தளர்ந்து இருக்காமல் ஒவ்வொருவரும் தமிழை வாழவைக்க முயலுதல் வேண்டும்.

நாம் செய்யத்தக்கதைச் செய்கிறேமா? தமிழுக்கு அவலம ஏர்பட்ட காலத்திலும்கூட பிறர்தயவின்றி நம்மாற் செய்யத்தக்கதைச் செய்யாமல் இருப்பது நீதியா? நாம் எழுதும் முகவரி, அனுப்பும் தந்தி, காசுக்கட்டளை, அஞ்சற் கட்டளை முதலியவற்றை ஏன் தமிழில் எழுதக்கூடாது? அரசாங்கத்துக்கும் பிறநிலையங்கள் யாவற்றுக்கும் எழுதுபவற்றை ஏன் தமிழிலே எழுதக்கூடாது? இவற்றை இன்றே இப்பொழுதே செய்தால 24மணி நேரத்துள் ஒரு பெரும்கொள்கைப் புரட்சித்திருப்பம் ஏற்பட்டு விடுமன்றே!

சிங்கள மக்கள் எல்லாவற்றையும் தங்கள் மொழியிற் செய்யவேண்டுமென்று ஆர்வமும் துணிவு முள்ளவர்களாயிருக்கிறர்கள் தமிழர்களுக்கு ஏன் இந்த ஆர்வமும் துணிவும் இன்னும் தோன்றவில்லை?

இயன்ற வழிகளில் எல்லாம் தமிழுக்குத் தொண்டு செய்தலே என் குறிக்கோள் இதற்காக யான் மேற்கொள்ளும் பணிகளுக்கு ஆதரவு நல்குமாறு தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகறேன் என்று கூறினுர்.

# யாழ்ப்பாணத்திற் குருகுலக் கல்வி

—0—

## பண்டுபோற் சிறப்புற செய்ய வேண்டியது

இற்றைக்கு நாற்பது வருடங்கட்குமுன் யாழ்ப்பாணத்திலே கல்வி குருமூலமாகவே மாணவர்க்குப் போதிக்கப்பட்டு வந்தது. குருமுகக் கல்வி ஆத்மீகக்கல்வியாயமையும். அக்கல்வி பரமபதியாகிய பரமசிவனின் திருவடித் தாமரைகளைத் தொழுது உய்யும் வண்ணம் கற்கும கல்வியாகும். ஆதியிலே பாரதநாட்டில் பல குருகுலக் கல்விக் கழகங்கள் இருந்தன. இருடிகள், தபோதனர்கள் வசிக்கும் ஆச்சிரமங்களும், மலையடிவாரங்களும், ஆற்றுவளம் நிறைந்த சோலைகளும் குருகுலக் கல்வி போதிக்கும் இடங்களாயிருந்தன.

ஸ்ரீ. கண்ணபிரானும் — குசேல முனிவரும் குருகுல வாச முறையிலேயே சாந்தீப முனிவரிடத்தில் கல்வி பயின்றனர். இதனுல் கண்ணனும் குசேலரும் மாதவச் செல்வங்களாய் விளங்கினர். தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வர்களாகிய இராமலக்குமணர்கள் குருகுல முறையிலே பயிற்றப்பட்டு வாழ்ந்தவர்கள் அவர்கள் காலையில் எழுந்து தங்கருமம் முடித்துக்கொண்டு நாடு நகர்கடந்து, காடுகடந்து சோலையெய்து வசிட்டர் ஆச்சிரமம் சேருவார்கள். அங்கு ஆச்சிரமத் தொண்டுகளைச் செய்து முனிவரின் உபதேசங்களையும் கேட்பார்கள். இதனுல் இவர்கள் தங்குலகுருவாகிய வசிட்டருடைய புத்திரர்களாகிருர்கள். இம்முறையிற் பண்டைய கல்விமுறைகளமைந்தன.

யாழ்ப்பாணத்திலும் குருகுலக் கல்விமுறைகள் இருந்தன. இருபாலைச் சேனுதிராயர் இல்லம் குருகுல வாசஸ்தானமாகவே இருந்தது. அங்கு பல மாணவர்கள் பாடங் கேட்டனர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருந்தகை இதில் முக்கிய இடம் பெறுகின்ருர். நாவலர் பெருமான் குருகுல வாசஞ்செய்தே சேனுதிராச முதலியாரிடம் பாடங் கேட்டார். இன்னும் புலோலி, மட்டுவில், நீர்வேலி, வண்ணார்பண்ணை, ஏழாலை, சுன்னுகம் முதலிய கிராமங்களிலும் குருகுலமுறைகள் இருந்தன, வட்டுகோட்டை அம்புலவாணநாத சுவாமிகள் எத்தனையோ மைல் தூரம் கால்வழி நடந்து மட்டுவில் வேற்பிள்ளைப் புலவரிடம் அவர் இல்லத்தில் பாடங் கேட்டனரென்றல் அக்கால மாணவர்கள் படிப்பதில் நேர்ந்த சிரமம் எத்துணையென்பது சொல்லாமலே விளங்கும் அக்காலம் பள்ளிக்கூடம் கிடையாது. வீட்டுத் திண்ணைகளும், மர நிழல்களுமே கல்விகற்கும் நிலையங்களாயின.

பழுத்த தமிழ் வித்துவானும் இப்போது தள்ளாடு பருவத்தினரும் கோலூன்றி நடப்பவருமாகிய பிரமஸ்ரீ சி கணேசையர் அவர்கள் தமது கிராமத்தில் இருந்து 10 மைல் தூரம் நடந்து

தென்மயிலை
சே. கோவிந்தசாமி

வண்ணை மகாவித்துவான் ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் பாடங் கேட்டவர். இத்தகைய பெரியார் இன்று எம் கிராமத்தில் ஆச்சிரம சீலராக விநாயகப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு "எலலாம்சிவன் செயல் என நினைத்து வாழுகின்ருர் இப்பெரியாரை முன் கண்டவர்கள் இப்போது காண்பரேல் உள்ளம் உருகுவார்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குருசிஷ்ய முறையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் திரு. த. கைலாசபிள்ளையவர்களிடமும் திரு அ. குமாரசுவாமிப் புலவரிடமும்பாடங் கேட்டுப் படித்தவர்கள். இதனுல் இவர் பழைய பண்பாடும், சிவபக்தியும், நல்லொழுக்கமும் வாய்ந்த தவப் பெருஞ் செல்வராக வாழுகிருர்கள். முன்னிருந்த பெரியோர்களான கைலாசபிள்ளை சபாரத்தின முதலியார், சிவபாதசுந்தரம் ஆகிய இவர்களும் குலகுல மூலமாகவே தமிழ் கற்றவர்கள்.

இவ்வித குருகுலக் கல்வி தற்போது அரசினர் பாடசாலைக் கல்வியாக மாறியது அரசினர் கல்வியாக இருந்த காலத்தும் பேராசிரியமணி திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் படிப்பித்த பரமேசுவரா, விக்ரோறியாக் கல்லூரிகளில் குருகுல முறையிற் பண்டைய நெறிகளுடன் கல்வி கற்பித்தாரெனப் பலர் கூற இன்றும் கேட்கின்றேம். இந்த வகையில் தற்போது பாடசாலைகள் நடாத்த முடியாதா? இது ஒரு கேள்வி—நடத்தலாம்.

ஒரு பாடசாலையில் தற்போது முப்பது நாற்பது ஆசிரியர்களும் படிப்பிக்கிருர்கள் இவர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு விதமான கொள்கையுடையவர்களாயிருக்கின்ருர்கள். ஆகவே மாணவர்களும் அத்தனைவிதக் கொள்கையுடையவர்களாகின்ருர்கள். இதனுல் இவர்கள் செய்கின்றவழி இன்னதென தெரியாது பொதுவுடைமை நாத்திகம் முதலிய கொள்கைகளில் ஈடுபடுகிருர்கள் பின் உலோகாயதர்களாகிருர்கள். இதனைப் பெரியார் இராசகோபாலாச்சாரியாரும் எடுத்துக்காட்டி இக்கால மாணவர்கள் நிலைமையைத் திருத்துமாறு வற்புறுத்துகிருர்கள். இளமையிலேயே மதக் கல்வி போதிக்கப்படல் வேண்டும் அன்றேல் மாணவர்கள் உலோகாயதராவார்கள் என அவர் கூறுகின்ருர். ஆதலால் மாணவர்களுக்கு மதக் கல்வி அத்தியாவசியமாகும். அதுவுமல்லாமல் சாதனையே உயிர்நாடியாயமைதல் வேண்டும். பாடசாலையில் மாணவர் படிப்பதன் நோக்கம் புறநோக்கமாய் இருந்தாலும் நாம் அகத்தில் ஒரு அமைதி பெற்று அமருந்தாகியதமிழ் மொழியைப் பருகிப் படித்தபடி ஒழுகி, தமிழை வளர்த்தலே சைவமதத்திற்குச் செய்யும் தொண்டாகித் தமக்கும நன்மை தருவதாகும். இங்ஙனம் மாணவர் செய்து வருவரேல் எதிர் காலத்தில் தமிழ் மொழி பண்டுபோல் வளரும் இதனைவிட்டு இளம் பள்ளிச் சிருர்களைப் பலர் அரசியல் வாதங்களுக்குள் ஈடுபடச் செய்து அவர்தம அரிய மாணவ வாழ்வைப் பாழாக்க முயல்வது வருந்துதற்குரியதாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள், மெய்கண்டார், சிவஞான சுவாமிகள் ஆறுமுக நாவலர் பெருமான் முதலான சைவப்பெருஞ் செல்வர்கள் இளைஞர்களாகவே வாழ்ந்து எம்மனோர்க்கு வழி காட்டியிருக்கிருர்கள் இவர்களின் அடிச்சுவட்டை மாணவர்கள் பின்பற்ற வேண்டும். பெரியோர் வாழ்க்கை முறையை நாம் சாதனை செய்து வாழ வேண்டும். இங்ஙனம் மாணவர்கள் வாழ்ந்து காட்டுவரேல் குலகுலக் கல்வியும் சைவத்தமிழ்நாடும் சிறேங்கி வளரும். அங்ஙனம் ஆகுக என்று சேதீச்சரநாதர் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேம்

---

### கொழும்பு நகர சபை

எவ்வித பகிரங்கக் கூட்டம் நடத்துதற்கும் கொழும்பு நகர மண்டபம் இடங் கொடுக்கக்கூடாதென்று கொழும்பு நகர சபையார் தீர்மானித்துள்ளனராம். சமயச் சொற்பொழிவுகளுக்கே இடங் கொடுக்கப் படமாட்டாது.

### நாயன்மார்கட்டு ஸ்ரீ பிச்சாடணமூர்த்தி பிரதிட்டாதினம்

நிகழும் துர்முகி ஞு பங்குனமீ 3௨ (16-3-57) பங்குனி உத்தர புண்ணிய தினமாகிய சனிக்கிழமை, நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராசேசுவரி பேச்சியம்பாள் கோவிலின் வடகிழக்குப்பக்கமாக அமைந்திருக்கும திருக்குளத்தின் அருகாமையில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும், ஸ்ரீ பிச்சாடணமூர்த்தியின் பிரதிட்டாதினமாகும். அன்று வழக்கம் போல் மூற்பகலில் விசேடாபிடேக ஆராதனைகளும, நண்பகலில் அடியார்களுக்குத் திருவமுது அளித்தலும், (அன்னதானம்) இனிது நிகழத் திருவருள் பாலித்திருக்கின்றது என்றும் மேற்படி தினத்தில் அடியார்கள், அபிடேகத்திரவியங்கள் கொண்டு வந்தும், அங்கு நிகழும் திருத்தொண்டுகளில் ஈடுபட்டுழைத்தும் செல்லவேண்டுமென்றும் மேற்படி கோவிலின் தர்மகர்த்தா, திரு. க. சின்னத்தம்பி அவர்கள் அறியத்தந்து அழைப்பு விடுத்திருக்கின்ருர்.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

—0—

### இந்து வாலிபர் சங்கம்

மேற்படி சங்க ஆதரவில் ஸ்ரீமத் சச்சிதானந்த யோகிஸ்வரர் அவர்களால் "கடவுளின் தத்துவங்கள்" என்னும் பொருள் பற்றி 22-2-57 புதன்கிழமை ஒரு உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது. பிரசாரகர் அவர்கள் கடவுளுண்மையை விளக்கும் பொழுது மாணவர்கள் விளங்குவதற்கு விஞ்ஞானக் கருத்துக்களைச் சுலபமாகப்பயன்படுத்தினுர். மின்சாரம், ஈதர் (Ether ஒலி அலைகள் முதலியவற்றின் மூலம் கடவுள் உண்மையை இலகுவாக விளக்கினுர். "இந்துக்கள் ஒரு கடவுளையே வழிபடுகின்ருர்கள். விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், வீரபத்திரர் என்றழைக்கப்படுவனவெல்லாம் கடவுளின் வெவ்வேறு மூர்த்தங்கள். ஒவ்வொருவரும தமக்கு இஷ்டமான ஒரு மூர்த்தத்தை வழிபடுவர். ஆனுல் இந்த வழிபாடெல்லாம் சிவனை வழிபட்ட முறையில் அமையும்" என மூர்த்தங்களின் தத்துவங்களைப் பற்றிக் கூறினுர். கூட்டத்துக்கு எமது சங்கத் தலைவர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் தலைமை வகித்தனர். மாணவன் சோ. பத்மநாதனுல் நன்றி கூறப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் பொன்னையா விநாயக மூர்த்தி — வழக்காளி
இல. M B 1004
எதிராக
மரணித்தவர்.
1. கரம்பன் கு. துரைசிங்கம் இளமென்றும் பெண்
2. ஷை லில்லி அக்கினேசுவும் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1004-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ஞு சித்திரை மீ 26 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 8062 50 ம் இதில் ரூபா 5000-00 க்கு 30-5-56 திகதி தொடக்கம் 7-8-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 15 வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 7-8-56 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 269-05 இதல் ரூபா 150-00 கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று கரம்பன் இறை உயிலடி நெற்பரப்பு 24ம் வீடும் கடைக் கட்டிடமும் வான் பயிர் செய்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கு கரம்பன் முருக மூர்த்தி கோயிலாதனம் வடக்கு தெரு. மேற்கு சுவாம்பிள்ளை பெண் ஆசுப்பிள்ளை தெற்கு கு துரைசிங்கம் இணமென்று பெண் லில்லி அக்கினேசுவும் இராசையா பெண் கண்மணியினுருமைக்காறரினுதனம் இதடங்கலும் ஆனல் குறித்த வீட்டிலும் கடையிலும் அவிரும்பிள்ளை கைம்பெண் மரியைப்பிள்ளையின் சீவிய உரித்து பிற நீங்கல்.

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
24-2-57.
M 486 15-3- (து 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புங்குடுதீவு கிழக்கு கனகசபை சிவசாமி —வழக்காளி
இல M B 978.
எதிராக
1. புங்குடுதீவு கிழக்கு இளையதம்பி சேதிராசாவும் பெண்
2. ஷை தில்லயம்மாவும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 978-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1957 ஞு சித்திரை மீ 25௨ வியாழக்கிழமை முற்பகல் 12 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1200-00ம் இதற்கு 23-8-56 திகதி தொடக்கம் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 5 வீத வட்டியையும் கோட்டுச் செலவும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோயிற்பற்று புங்குடுதீவு கிழக்கிறை தலைசாட்டி பிரிவுகளுக்கு நிலப்பரப்பு 4 குளி 10½ யும் செய்பயிர் வான்பயிர்களும், வீடும் கிணறும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு தம்பிராசா பெண் பரிமளம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வயிரமுத்து பெண் நாகமுத்து, தெற்கு இரத்தினம் பெண் தங்கக்குட்டியினுதனம் இதடங்கலும்.

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்,
15-2-57.
M. 485 15-3 (து 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. குமரேசர் வேலாயுதன்
2. குமரேசர் வேலாயுதன் பெண் பொன்னம்மா சித்தம்கேணி தற்போது கொழும்பு —வழக்காளிகள்.

இல 8920
எதிர்
1 செல்லப்பா சின்னத்துரையும் பெண்
2 சரசுவதியம்மா காலஞ்சென்றுபோனு கொக்குவில் மேற்கு
3. செல்லப்பா சின்னத்துரை மகள் தவமணி —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 8920-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 957ஞு சித்திரை மீ 27௨ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபாய் 380/- ரூபாய் 1700/-க்கு ஒன்பது வீதப் வட்டி 18-6-52 முதல் 20-5-54 வரையும். அதன் பின் கூடிய தொகைக்கு ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 262/49 தீர்வைத்தொகையில் ரூபாய் 1000/- கொடுபட்டிருக்கு.

### காணி விபரம்

யாழ்ப்பாணப் பகுதி சக்காலையில் மாதன் வயலும் புதரன் வயலும் என்னும் காணி நெ. இ. 14 5/8. எல்லை கிழக்கு அருணசலம் மார்க்கண்டு, நாகமுத்த தம்பிப்பிள்ளையும் வேலு நாகமுத்துவும் இவர்களின் ஆதனம். வடக்கு தம்பையா பெண் சின்னம்மாவின் ஆதனம். மேற்கு கணபதியர் அம்பலவாணர், வேலு நாகமுத்து பங்காளரும் குமலிங்கமும் நாகலிங்கம் இவர்களின் ஆதனம். தெற்கு பிள்ளையார் கோவில் ஆதனம், அருணசலம் மார்க்கண்டுவின் ஆதனமும், எல்லை கிழக்கிலும் தெற்கிலும் இருக்கும் கிணற்றில் பங்கும் வளிவாய்க்கால் உருத்தும் வடக்கும் கிழக்குமுள்ள காணிக்குப்போகும் வாய்க்கால் உரித்து பிறநீக்கலாக.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
11-3-57.
M. 488 15-3-57 (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 741
முருகேசு கைம்பெண் நாகரத்தினம்
வண்ணார்பண்ணை கிழக்கு வழக்காளி
எதிர்
சின்னத்தம்பி சின்னையா வண்கிழக்கு எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 741ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஞு வைகாசி மீ 4௨ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தவலத்தில் விற்கப்படும்.

தீர்வைதொகை ரூபா 671-85 ரூபா 450/- க்கு 17-1-56 துவக்கம் பணம் கொடுக்கும் வரைக்கும் 12 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 75/—

### காணி விபரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கில் நூற்றாலின்டி அல்லது நூற்கொச்சியடி என்னும் காணி நீ இ. 2 குளி 4ம் 10 ம் துண்டிலிருக்கும் கிணற்றில் பங்கும் வளி வாய்க்கால் உருத்தும் 15 ம் ஆண்டு ஓரமாக மற்றும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வேலன் கந்தனுக்குரிய ஆதனம்.

வடக்கு திண்னவேலி கிராம எல்லையும் நாகனுதன் சின்னத்தம்பியின் ஆதனமும் பரமநாதர் சரவணைபெருமாளின் ஆதனமும். மேற்கு அப்புக்குட்டியின் ஆதனம் தெற்கு கைஒழுங்கை மாகப்பும் வேலன் வயித்தியின் ஆதனமும். இவை அடங்கிலும்

வ. அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
8-3-57.
M 487 15-3-57 (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
அனலைதீவு அருணசலம் கனகசபை பெண் அன்னம்மா வழக்காளி
இல M B 1020
எதிராக
அனலைதீவு தற்போது கோண்டாவில் சந்தி கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் அருணசலம் கனகசபை.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1020ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஈட்டுறித்த எனல் 1957ம் ஞு சித்திரை மீ 9ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பதினொரு மணி தொடக்கம் கீழ்க் காணும் முதலாம் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை — முதல் வட்டி ரூபா 3045/- ம் ரூபா: 2500/ க்கு 7-6-1956 தொடக்கம் 24-10-1956 வரை 10 வீதமான வட்டியும் அதக்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும்.

### ஈட்டுறித்து விபரம்

1947 ம் ஞு புரட்டாசி மீ 15ம் திகதி நொத்தாரிஸ் ஆ கனகசபை முகதாவில் 10877ம் இலக்கத்தில் எழுதப்பட்ட ஈட்டுறுதியில் எதிராளிக்குரிய சகல நயம் உரித்துச் சோந்தை முழுவதும் அவ் ஈட்டுறுதியால் கீழ்க்காணும் ஆதனங்கள் ஈடுவைக்கப்பட்டுள்ளன.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோயிற்பற்று அனலைதீவு இறை "புளியங்காடும் கலட்டியும் பர. நீ. இல. ஆறு (6) தென்னைகளும் எல்லை கிழக்கு வயித்தியநாதர் சபாபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கு முரியவாதனம். வடக்கு கணபதிப்பிள்ளை கனசபைக்குரியவாதனம் மேற்கு பூபாலன் பெண் குணத்திற்குரியவாதனம் தெற்கு கணேசபிள்ளை பெண் தெய்வானைப் பிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பாகமும் தூர்வை வழி இறை வாய்க்கால் தண்ணீர்ப்பங்கும்

(2) ஷை அனலைதீவு இறை "தில்லன்குளியும் ஆச்சன் சள்ளியும்" பர நீ. இல பதினைந்து 15) கிணறும் எல்லை கிழக்கு வயித்தியநாதர் பெண் மீனுட்சிப்பிள்ளைக்குரிய வாதனம். வடக்கு திருவாதிரை மடத்திற்குரிய வாதனம் மேற்கு வயித்தியநாதர் சண்முகத்தின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரியவாதனம் தெற்கு சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்குரிய வாதனம் இதடங்கலும் ஆனல் கிணற்றில் தெற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் பிற நீங்கலாக.

1957ஞு மாசிமீ 26-ம் திகதி

வை. எரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

காரைநகர்,
M 491 15-3- (து. 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
கரம்பன் வேல்முருகர் சிவலிங்கபிள்ளை வழக்காளி
இல. M B 226
எதிராக
1 ஊர்காவற்றுறை சரவணை அவுரன் யோசேப்பு
2 ஷையூர் பெண் சில்வெஸ்ரிரு எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 226-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு கண்டுக் காணிகள் 1957 ஞு சித்திரை மீ 6-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் முதலாம் காணியும் முற்பகல் பத்து மணி தொடக்கம் 2-ம் காணியும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 2 28-50 சதமும் ரூபா 1500 க்கு 10 5 1955 தொடக்கம் 16 8-1955 வரை 18 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 188-00 தீர்வைத் தொகையில் ரூபா 1000 00 கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற் பற்று நாரந்தனை இறை "நாரந்தனைப் புலமும் கேவல நாரந்தனையும்" வி பர. 10 1/2 நெ பர 15 3/4 பதினேந்தேமுக்காலும் கிணறும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு மனுவல் அலேசுவினுதனம் வடக்கு பிரான்சிஸ் பெண் அந்தோனியாளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு பின்னும் காணும் இரண்டாம் ஆதனம் தெற்கு முடிக்குரியவாதனம். இதடங்கலும் கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும்.

2 ஷை இறை தெற்குப்பிட்டி நெ பர 15 பதினைந்தும் வீடுகளும் எல்லை கிழக்கு மேலே சொல்லிய முதலாம் ஆதனம் வடக்குபேதுறு பெண் பூரணத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு அலேசு தாவீதுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு வைத்தியநாதபிள்ளை பெண் வள்ளியம்மையின் உருமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

காரைநகர் 1957ம் ஞு மாசிமீ 19௨

வை. எரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M 490 15-1-57 (து. 300)

## கட்டைவேலி ஞானசாரிய கல்லூரி

—::—

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆதியனைத்றைச் சிறப்பாகச் செய்து மாணவர்களுக்குப் பெற்றோர்களுக்கும் சைவசமயக் கல்வியை ஊட்டிவருகின்றது.

கட்டடம்:

நிலையான கட்டடங்கள் பல கட்டப்பட்டுள்ளன தாவர சாத்திரம், பிராணி சாத்திரம், வீட்டுப்பணி ஆதியனைற்றிற்கெனத் தனித்தனி ஆயகூடங்கள் அமைக்கப்பட்டு அரசினரின் அனுமதியைப் பெற்றுள்ளன.

வாசிகசாலை:

மாணவர் வாசிப்பதற்குப் போதிய பலவகையான புத்தகங்களிருக்கின்றன. இதற்கென விசாலமான அலறயல் மைதயை யிட்டு மனம் வருந்துகின்றோம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு ம. கந்தையா குமாரசுவாமி —வழக்காளி
இல. M. B. 1140
எதிராக
1 காரைநகர் மேற்கு K. ஆறுமுகம் செல்லையாபிள்ளை
2 ஷை இளையதம்பி ஆறுமுகம் கைம்பெண் சிதம்பர அம்மா —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1140-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் தண்டுக்காணி 1957ம் ஆண்டு சித்திரைமீ 10௨ புதன் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 10136-00 ம் இதில் ரூபா 8000 க்கு 31-7-56 திகதி தொடக்கம் 2-10-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 4 வீத வட்டியையும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 2-10-56 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும் இதில் ரூபா 200-00 கொடுபட்டது.

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று களபூமி இறை உப்பு வயல் உறுதியின் படி நெற்பரப்பு 18½ ஆனல் ஆட்சியின்படி நெற்பரப்பு 20. எல்லை கிழக்கு கந்தையா கைம்பெண் காசுபதி வடக்கு பொன்னையா பெண் பாறுபதிப்பிள்ளை மேற்கு கந்தையா சிவசம்புவின் உருமைக்காறரும் K. ஆறுமுகம் செல்லையாபிள்ளையும் தெற்கு இராமனுதர் மகள் வள்ளியம்மையுதடங்கலும்.

2. ஷை காரைதீவுக் கோவிற்பற்றுதங்கோடை இறை 'இராவி' நிலப்பரப்பு 12 உறுதியின்படி ஆனல் அளவின்படி நிலப்பரப்பு 10 குளி 13½ம் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தர் செல்லத்துரையும் அருணசலம் சிதம்பரப்பிள்ளையும் வடக்கு றேட்டு மேற்கு முருகேசு வேலுப்பிள்ளை தெற்கு கந்தையா சிவசம்புவின் உரிமைகாறர் இதடங்கலும்.

3. ஷை களபூமிஇறை உப்பு வயல் நெற்பரப்பு நிலப்பரப்பு 15 எல்லை கிழக்கு அருணசலம் வேலுப்பிள்ளையும் ஆறுமுகம் மகள் கமலாவதியும் வடக்கு ஆறுமுகம் பெண் இராசம்மா மேற்கு கணபதிப்பிள்ளை பெண் தங்கமுத்த தெற்கு காமோதரம் பிள்ளை பெண் மீனுட்சியும் அருணசலம் வேலுப்பிள்ளையும் இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
A. S Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்
7-3-57
M 484 15-3-57 (து. 50)

சைவவித்தியாவிருத்திச்சங்கம்:

இக்கல்லூரியின் பொது முகாமை சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு உறுதிக் கட்டுப்பாடுகளுடன் கொடுக்கப்பட்டுளது.

விளையாட்டு:

கல்லூரியிலுள்ள ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் விளையாட்டிற்கெனத் தனித்தனி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சாரணர் இயக்கம்:

தற்போது திரு கா. நடராசா விளையாட்டு ஆசிரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு மாணவர் அதிக ஆர்வமாகச் சிரத்தை எடுத்துத் திருத்தம்காட்டி வருகின்றார்கள்.

# ஓர் வேண்டுகோள்

## சிதம்பரம்
## ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தன்மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம்பலத்து ணின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

பஞ்சலிங்கத் தலங்களுள் ஆகாசலிங்கத் தலமாக எங்கள் தாய் நாடாகிய பரதகண்டத்தின்கண் விளங்குவது தில்லையாகும். இது சோழநாட்டிலுள்ளது. எங்கள் உடம்பிற்கு இருதயம்போல இவ்வண்டத்துக்கு இருதயமாக விளங்குவது இத்தலம். இத்தலம் தரிசிக்க முத்தி கொடுப்பதாகும். கோயிற் புராணம், சிதம்பர புராணம், தில்லைவன புராணம், ஏமசபாநாதபுராணம், புண்டரீக புராணம் முதலிய புராணங்களில் இந்தத் தலத்தின் மான்மியங்களைப் பரக்கக் காணலாம். சிவஸ் தலங்களுள் கோயில் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டழைக்கப்படுவது இத்தலமேயாகும். தேவர்கள் வியாக்கிரபாதர் பதஞ்சலிமுனிவர் திருமுறையாசிரியர்கள் வேந்தர் அமைச்சர் முதலிய யாவரும் இத்தலத்தின்கண் நடராசப்பெருமான் புரியும் ஆனந்தக்கூத்தினைத் தரிசித்து இம்மை மறுமை யின்பங்களை யடைந்தனர்.

இந்தத் தலத்தில் ஸ்ரீநடராசப்பெருமான் மக்களுக்குத் தரிசனமளிப்பதற்கு ஐந்து அங்கங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று பிரசித்தி பெற்ற ஆயிரக்கால் மண்டபமாகும். ஸ்ரீ நடராசப் பெருமான் தமது அருட் சக்தியாகிய சிவகாமியம்மையாருடன் அடியார்களுக்கு ஒவ்வொரு வருடமும் இருமுறைகளில் ஆனி உத்திரத்திலன்றும் மார்கழித் திருவெம்பாவைப்போதிலும் இம்மண்டபத்தில் தரிசனம் அளிப்பார். இம்மண்டபம் மூன்றாவது குலோத்துங்க சோழராசாவினால் இரண்டாவது நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது. தெய்வச் சேக்கிழார் தமது 'பெரிய புராணம்' என்னும் சைவத் தெய்வப் புராணத்தை இவ்வாயிரக்கால் மண்டபத்திலிருந்து இயற்றினாரெனவும் அழியாப் புகழ்படைத்த பதஞ்சலிமுனிவர் தமது வியாகரண மகா பாஷ்யப் பாடத்தை தமது ஆயிரம்சீடர்களுக்கு இங்கிருந்தே உபதேசஞ் செய்தாரெனவும் சொல்லப்படுகின்றது. அடியார்கள் சமய சம்பந்தமான விஷயங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் இம் மண்டபத்தில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 340 அடி நீளமும் 140 அடி அகலமும் கொண்டுள்ள இம் மண்டபம் இப்பொழுது பல பாகங்களில் பழுதடைந் திருக்கின்றது. சிதம்பராலயத்தின் மற்றைய பாகங்களில் வேண்டிய திருத்தங்களைச் செய்து, சென்ற 1955ம் ஆண்டு ஜூலாய் மாசம் 7-ந் தேதி சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகத்தை அத் தலத்தில் செய்தற்கு உதவியாகவிருந்த ஸ்ரீ சபாநாயகராலய புனருத்தாரணச் சபை திருவருளை முன்னிட்டு இம் மண்டபத்தைத் திருத்திப் புனருத்தாரணஞ் செய்ய முன்வந்திருக்கின்றது.

இத் திருப்பணிக்கு ஏறக்குறைய 2 இலட்சம் ரூபா தேவையாயிருக்கிறது. ஈழநாட்டிலுள்ள சிவனடியார்கள் இத்திருப்பணிக்குப் பணம் அனுப்புதல் சிறந்த சிவபுண்ணியமாகும். இக்கால அரசாங்கக் கட்டுப்பாடுகளின்படி அவர்கள் தனித்தனி பணம் அனுப்புதல் மிக்க கஷ்டமாயிருக்கும். இத் திருப்பணிக்குத் தங்களாலியன்ற பணமுதவ விரும்புகின்றவர்கள் தங்கள் பணத்தினை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைத்தால் அவர் அரசினரிடம் உத்தரவுபெற்றுச் சேரும் பணத்தை ஒரே தொகையாக ஸ்ரீ சபாநாயகராலயப் புனருத்தாரணச் சபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைப்பார். ஆனபடியால் அன்பர்கள் தங்கள் பணத்தைச் சுணக்காது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தனாதிகாரிக்கனுப்பி வைப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
5-3-57.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

M, 482 5-3-57

---


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


---

# தெய்வீக வாழ்க்கைச் சாதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்த்தமாகிய 4 மணியளவில் எழும்புதல் வேண்டும். குறித்த பிராமி முகூர்த்தத்தில் சத்துவகுணம் பரந்து நிலவுகின்றது. நித்திரையின் பின் தெளிவுற்றுச் சலனமற்றிருக்கின்றது மனம். ஓங்காரத்தில் உள்ளத்தைப் பதித்தும், மந்திர செபஞ் செய்தும், தோத்திரங்களைப் படித்தும், தியானஞ் செய்தும், தெய்விக சிந்தனைகளாலும் உயர்ந்த எண்ணங்களாலும் மனத்தை நிரப்புதல் வேண்டும். அதிகாலையில் எழுந்து இவ்வாறு சாதனை செய்தலும் ஓர் ஒழுக்க முறையாகும். களியாட்டங்களிலும் விளையாட்டுக்களிலும் நள்ளிரவு வரையிற் பலர் நேரத்தைச் செலவழிக்கிறார்கள்; காலையில் எழும்புவதும் பிந்தியேயாகும் உள்ளுணர்வு பெற்றுப் பண்படுதற்கு இது பெரும் இடையூறாகும். தியானஞ் செய்ய விரும்பும் சாதகர் பிராமி முகூர்த்தத்தில் எழும்புதல் வேண்டும்.

### தன்னடக்கம்

உணர்ச்சி வேகத்தைத் தடுத்தல் அவசியம் வேண்டப்படுவது. மெதுவாகவும், இனியவையாகவும், அன்பாகவும், உண்மையாகவும் சொற்களை அளந்தும், உறுதியாயும் பேசுதல் வேண்டும். பிராணாயாமமும், மௌனமும் சாதிக்கப்படுதல வேண்டும். அப்படிச் செய்தாலே உணர்ச்சி வேகத்தையும், உணர்ச்சிப் பேச்சையும் தடுத்து அமைதியான மன நிலைமையை அடையலாம்.

பகவத்கீதையில் மூன்று விசேடசாதனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் பயன்படுத்துவனவாகும். உள்ளதை உள்ளவாறு சொல்லுதல், எவ்வுயிருக்குந் தீங்கிழையாது அன்பாயிருத்தல், பிரமச்சரியங் காத்தல், இறை வழிபாடு ஆகியவை நன்கு சாதிக்கப்படுதல் வேண்டும். அரைகுறை முயற்சி இடம்பெறமாட்டாது.

### நாகாத்தல்

ஏனையோரைத் துன்புறுத்தும் இன்னாதவற்றை அகற்றி, இனிய இன்பகரமான, உண்மையான, நன்மை பயக்கும் சொற்களைப் பேசுதல் வேண்டும். நாவடக்கம் பெரிதும் வேண்டப்படுவதொன்றாகும். வீண் வாதங்களிலும் வெறும் பேச்சுக்களிலும் மிகுந்த சக்தி வீணாகச் செலவிடப்படுகின்றது. இச் சக்தி உறுதிதரும் சக்தியாய் மாற்றப்படுதல் வேண்டும். அப்பொழுது அது தியானத்துக்கு உதவியாய் நிற்கும். அச்சம் கோபம் முதலிய வற்றால் சக்தியை வீணாகாது திரமான தியானத்துக்குச் சாதகன் அதைப் பயன்படுத்துதல் வேண்டும். நூல்களைப் படித்தலும் நாவடக்கச் சாதனையாகும்.

### மன அடக்கம்

மகிழ்ச்சி, சாந்தம், மௌனம். தன்னடக்கம், தூய்மை ஆதியனவை மன அடக்கச் சாதனைகளாகும். நித்திரை விழித்தலும் இத்துறையில் ஓர் சாதனையாகும். சிவராத்திரி, வைகுந்த ஏகாதசி விரதங்கள் இருக்கின்றன. இவ்விரவுகளில் கண்துயிலாது இறைவழிபாடு செய்தல் வேண்டும். இடையிடையே உணவுட்கொள்ளாது விரதமிருந்து நித்திரை நீக்குதல் உடலுக்கும் உள்ளத்துக்கும் உயர்வு தரும் சாதனங்களாகும். எதிலும் அளவுகடந்து மிகுதலைத் தவிர்த்து அளவுக்குட்பட்டு நிற்றல் வேண்டும். இன்னல் வரும்பொழுது தளர்வின்றியிருந்தும், பொறுமை, சகிப்பு, பந்தப்படாமை, அவா அறுத்தல் ஆதியன சாதித்தும், தனக்கிரங்கல், பிடிவாதம், வீண் பெருமை, தற்பெருமை, அகங்காரம் ஆதியவற்றை அகற்றியும் பழகி வருதல் வேண்டும். இவை மன அடக்கத்துக்கு வேண்டப்படும் அவசிய சாதனைகளாகும்.

வளரும்

---


# 6000 மைல் சுற்றுப்பிரயாணம்

—— இந்தியாவில் 35 நாட்கள் ——

குறைந்த செலவு    நிறைந்த வசதி

சயன — போசன — ஸ்நான வசதிகள் உள்ள
புகையிரத வண்டியில் 2500-ம் ஆ
புத்த ஜயந்தி மலிவுச் சீட்டு

திருச்சி, பங்களூர், மைசூர், பூனா, பம்பாய், எல்லோரா, அஜந்தா, ஸாஞ்சி, ஆக்ரா டெல்கி — மதுரா, பிருந்தாவனம், லக்னோ, கான்பூர், அலகபாத், பனாரஸ் (காசி), கயா, கல்கத்தா, சித்தரஞ்சன், பூரி, மதராஸ் முதலிய இடங்கள்.

கட்டண விபரம்

( இரு நேர தாவர போஜனம் உட்பட )

| | |
|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா 625-00 |
| இரண்டாவது வகுப்பு | 475-00 |
| மூன்றாவது வகுப்பு | 325-00 |

புறப்படும் தேதி இலங்கையிலிருந்து 15-4-57

(விண்ணப்பம் 24-3-57 ன் முன்பே சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

முழு விபரம் :

விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பறேஷன்
( பிரயாண வசதி செய்பவர்கள் )

31, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
( பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம் )

தந்தி: "SRIVEL"


---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 15-3-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.